1979 ஏப்ரல் 16]

இத்தலார் அரசினர் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்

* வினா எண் 703—திரு போ. கோபாலன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா;

(அ) உதகை தாலுக்கா இத்தலார் அரசினர் உயர்நிலைப் பள்ளி வகுப்பறைகள் இடிந்து விழுந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மேல் அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) இப்பள்ளிக்கட்டிடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்து விட்ட தாக 6-7-78-ல் அரசுக்கு ஒரு தந்திச் செய்தி கிடைத்தது. இதை விசாரித்ததில் பள்ளிக்கட்டிடங்களின் ஒரு கட்டிடத்தில் காற்றுப் போக்கி மட்டும் தேசமடைந்ததாகவும், தந்தியில் குறிப்பிட்டபடி கட்டிடம் எதுவும் இடிந்து விழவில்லை எனவும் தெரியவந்தது. கட்டிடங்களை பழுது பார்க்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

திரு. க. மருதாசலம் : இந்தக் கட்டிட வேலை எப்போது முடிவடையும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? நீண்ட நாட்களுக்கு முன்பே அங்கிருந்து மனுக்கள் அனுப்பியும் கவனிக்கப்படவில்லை. அமைச்சர் அவர்களுக்கு அது தெரியும். அதைத் துரிதப்படுத்த அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய் வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அடுத்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்கிறபோது இவ்வேலையை மேற்கொள்ள இயலும்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : தமிழ்நாட்டில் பல பகுதி களில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளிகளில் கட்டிடம் மோசமாக இருக்கிறது. இது குறித்து சில பள்ளிகளின் பெயரைச் சுட்டிக் காட்டி அரசுக்குத் தெரிவித்தும், கட்டிட வேலை நடைபெற வில்லை. வருகிற ஆண்டிலாவது ஜூன், ஜூலை மாதங்களி லாவது பழுதடைந்த கட்டிடங்களைப் பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நிதி நிலைக்கேற்ப அந்த வேலைகள் செய்யப்படும.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்